# பனந்தும்பு உற்பத்தி



வெளியீடு:

**பனை அபிவிருத்தி சபை**

54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

279.8

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# முன்னுரை

பனந்தும்பு உலக நாடுகளில் மிகவும் மதிப்பு மிக்கது. தமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை அள்ளித் தரக்கூடியது. இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் பருத்தித்துறை, கொழும்புத்துறை, வல்வெட்டித்துறை, வங்காலை, போன்ற துறைமுகங்களிலிருந்து லண்டன் முதலிய நகரங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதனால் அதிக வருமானத்தை நமது நாட்டு மக்கள் பெற்றார்கள்.

காலப் போக்கில் இத் தொழில் கைவிடப்பட்டதும் இங்கு இயங்கிய தும்பு ஏற்றுமதிக் கம்பனிகள் இந்தியாவில் இத் தொழிலை அறிமுகம் செய்து அங்கிருந்து தும்பை ஏற்றுமதி செய்யத் தொடங்கினர். தற்பொழுதும் ஏற்றுமதி செய்தும் வருகின்றனர். ஆனால் நாம் நமது நாட்டில் இத் தொழில் இயங்கிய வரலாற்றை மறந்ததுடன், தற்போது இந்தியாவில் இருந்தே கற்றுக் கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எது எப்படியிருப்பினும் இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் இடையறு முயற்சியினால் நாட்டின் பல பாகங்களிலும் தும்பு தயாரிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கணிசமான அளவு தும்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ஏறக்குறைய 10 மெட்ரிக் தொன் தும்பு ஜப்பானுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ் உற்பத்தி கூடப் போதக் கூடியதில்லை. வெளிநாடுகள் எம்மிடம் தும்பு கொள்வனவு செய்ய ஆவலாக உள்ளன. எமது நாட்டின்

279.8


தும்பு ஏனைய நாட்டுத் தும்புகளை விட மிகவும் விசேடமான தரமுள்ளவை. ஆனால் உற்பத்தியில் ஈடுபடும் மக்களின் தொகை குறைவாகவேயுள்ளது. இதனால் உற்பத்தி அளவும் மிகக் குறைவாகவேயுள்ளது. உற்பத்தி கூடினால் மட்டும் தான் துப்பு ஏற்றுமதி செய்ய வாய்ப்புண்டாகும். தும்பு கொள்வனவு செய்யும் நாடுகள், கம்பனிகள் மாதா மாதம் ஓர் குறிப்பிடப்பட்ட தொகை தும்பை மாறா அடிப்படையில் தொடர்ந்து வழங்க முடியுமா? என்று கேட்கும்போது குறிப்பிட்ட தொகையைத் தொடர்ந்து கொடுப்பதற்கு எம்மால் முடியாமல் இருக்கிறது. அதற்கு உற்பத்தியாளரிடம் ஊக்கமின்மையே காரணமாக இருக்கிறது. உற்பத்தியாளர்கள் இத் தொழில் செய்யப் பின் நிற்கிறார்கள். இத் தொழிலைச் செய்வது கௌரவக் குறைவாகக் கருதுபவர்களும், இருக்கத்தான் செய்கிறார்கள். இவற்றை மறந்து நாட்டையும் நமது பொருளாதாரத்தையும் வளம் படுத்துவதற்கு வீணாகக் காய்ந்து விறகாகவும் சாம்பலாகவும் அழிந்துபோகும் பனம் கங்குகளை பயன்படுத்தி தும்பு சேகரிப்போர் மத்தியில் பெறுமதி மிக்க அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க முடியும்.

அல்லாமலும் பனந்தும்பைப் பயன்படுத்தி அதன்முடிவுப் பொருளாகிய தூரிகைகளை (Brush) செய்து ஏற்றுமதி செய்வதன் மூலமும் மிகக் கூடுதலான அந்நியச் செலாவணியைப் பெறுவதுடன் உள்நாட்டின் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாய் இருக்கின்றது.

இவற்றிற்கு ஏற்ற முறையில் பனைவடலிகளிலிருந்து கங்குகளைக் களைந்தெடுத்து தும்பு தயாரிக்கின்ற முறைகளை இச் சிறு பிரசுரம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. இவ் ஆலோசனைகளைப் பயன்படுத்தி தும்பு உற்பத்தி மேற்கொள்ளுமிடத்து நாட்டு வருமானத்தைப் பெருக்குவதுடன் வேலையில்லாப் பிரச்சினைகளின் ஒருபகுதியாவது நிவர்த்தி செய்யப்படலாம் என்பது எமது நம்பிக்கையாகும்.

''கழிவைக் காசாக்குவோம்''

# பனம் தும்பின் வகைகளும் இயல்புகளும்



**பனம்** தும்பு கங்கு மட்டையில் இருந்து பெறப்படுகின்றது. இது ½ அடி தொடக்கம் 2 அடி வரையான நீளமும் 4 அல்லது 5 அங்குல அகலமும் உடையது. இதில் ஈரலிப்பும், ஒருவித சாறும் இருநத பொழுதிலும் இதனை வெட்டும் பொழுது காய்ந்தது போன்று மண்ணிறமாகவும் காணப்படும்.

கங்கு மட்டையின் உட்பாகத்தில் மெல்லிய தோல் போன்ற பகுதியுள்ளது. இவற்றில் தும்பு நீளவாட்டில் படர்ந்து கிடக்கும். அத்தும்புகளுக்கு மேலாக மிக நுண்ணிய தோல் போன்ற தும்பு குறுக்காகப் பின்னிப்படர்ந்திருக்கும். ஒருவகைச் சதைப்பற்று இதனை உறுதியாகப் பிணைத்

திருப்பதனைக் காணலாம். தும்பினைப் பெறுவதற்கு இந்த சதைப்பற்றினை நீக்குதல் அவசியம். கங்கு மட்டைகளில் பசுமைத் தன்மை இல்லாமல் போவதற்கு முன்பதாகத் தும்பினைப் பெற்றுக் கொள்ள முயல வேண்டும்.

இயல்புகள்:

அ. பனம் தும்பு வளைந்தாலும் தானாக நிமிர்ந்து கொள்ளும்.

ஆ. தண்ணீரினால் சேதமடையாது.

இ. விரைவில் தேயாது.

ஈ. வெப்பம், மின்சாரம் என்பவற்றால் பாதிப்படையாது.

**பனம் தும்பின் வகைகள்:-**

பொதுவாகப் பனந்தும்பினை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. கறுப்புத் தும்பு:-

10 முதல் 15 அடி உயரமுடைய வடலிகளின் கங்கு மட்டைகளில் இருந்து பெறப்படும். இத்தும்பு மிகமிக உறுதியானது. பாரம் இல்லாதது. இதனைக் கொண்டு தூரிகை, துடைப்பம் போன்றவற்றை இலகுவில் செய்யலாம். கறுப்புத் தும்பு வெளிநாட்டு, உள்நாட்டுப் பாவனையாளர்களால் பெரிதும் விரும்பப்படுகிறது.

2. வெள்ளை நிறத் தும்பு:-

இத்தும்பு முதிர்ந்த பனைகளில் இருந்து பெறப்படுகிறது. மென்மையானது. வலிமையும், கனமும் மிகக் குறைந்தது. மிருதுவான தூரிகை வகைகளைச் செய்வதற்கு உகந்தது.

3. கறுப்புத் தும்பு வெள்ளைத் தும்பு இரண்டினதும் தன்மைகள் கலந்து காணப்படும் தும்பு.

வடலிக்கும் மிகமுதிர்ந்த பனைக்கும் இடைப் பருவத்தில் உள்ள பனையின் கங்கு மட்டையில் இருந்து இத்தும்பு பெறப்படுகிறது.

இம்மூன்று வகைத் தும்புகளையும் அவற்றின் நீளத்தைக் கொண்டு மேலும் மூன்றாகப் பிரிக்கலாம். 12 அங்குலத்துக்குக் குறைந்தவை முதலாவது தரம். 12 முதல் 15 அங்குலம் வரையிலானவை இரண்டாவது தரம். 15 அங்குலத்துக்கு மேற்பட்டவை மூன்றாவது தரம்.

**கங்கு மட்டை சேகரிக்கும் காலம்:**

தும்புக்காகக் கங்கு மட்டைகளைச் சேகரிப்போர் பனை அல்லது வடலியில் இருந்து ஓலை வெட்டப்பட்ட 2½ மாதத்திற்குள் தும்புக்காகக் கங்குமட்டை சேகரித்தல் பொருத்தமானதாகும். அதன் பின் கங்குமட்டை கருகிவிடும். ஆதலால் சிறந்த தும்பினைப் பெற்றுக்கொள்ளல் முடியாது.

நல்ல பயனைப் பெறுவதற்கு 2 வருடங்களுக்கு ஒரு முறையே பனையிலோ அல்லது வடலிகளிலோ ஓலைகளை வெட்டிக் கங்கு மட்டைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்வது பனை அல்லது வடலி விரைவில் பட்டுப் போவதை தடுக்கும். அத்துடன் மரங்களும் நன்கு வளர்ந்து சிறந்த பயனைக் கொடுக்கும்.

15 வருடங்களுக்குக் குறைந்த வடலிகளில் இருந்து கங்கு மட்டைகளைப் பெறுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

10 வயதுக்குக் குறைந்த வடலிகளின் கங்கு மட்டைகள் தும்பு பெற உதவாது. கங்கு மட்டைகள் சேகரிக்கும்பொழுது எப்பொழுதும் 10 தொடக்கம் 15 வரையிலான ஓலைகள் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

**தும்பு எடுக்கத் தேவையான கருவிகள்:-**

கங்கு மட்டைகளில் இருந்து தும்பினைப் பெறுவதற்குப் பின்வரும் கருவிகள் முக்கியமாகத் தேவைப்படும்.

**அ. அரிவாள்:**

இது உருக்கால் செய்யப்பட்ட கூரிய ஆயுதமாக இருக்க வேண்டும். மரங்களில் இருந்து கங்கு மட்டைகளை அகற்றவும், அக் கங்கு மட்டைகளின் உட்பாகத்தில் உள்ள மெல்லிய தோல் போன்ற பட்டையை அகற்றவும் உதவும்.

**ஆ. அடிகல்:**

ஒரு சதுரமான (சுமார் 9 அங்குலம்) ½ அடி உயரமுள்ள கருங்கல் மிகவும் உபயோகமானது.

இ. தட்டுப் பொல்லு:

இரும்புச் சுத்தியல் போன்று மரத்தினால் ஆன மரக் கட்டை.

ஈ. சீப்பு:

இது 4 அடி நீளமும் $1\frac{1}{2}$ அடி அகலமுமுள்ள பலகையில் 4 அங்குல நீளம் கொண்ட கூரிய ஆணிகள் 25ஐ மூன்று வரிசையில் பொருத்தியதாக அமைய வேண்டும். இவ்வாறுகச் செய்யப்பட்ட சீப்பினை முதற் கூறிய நீள் பலகையில் பொருத்த வேண்டும். அடிகல்லில் தட்டுப் பொல்லினால் அடித்துப் பெறப்படும் தும்பினை இச் சீப்பில் இட்டு வாருவதன் மூலம் தும்பில் உள்ள கழிவுப் பெருட்கள் அகற்றப்படும்.

தும்பு எடுத்தல்:-



ஈரலிப்புத் தன்மை கொண்ட கங்கு மட்டையை இரண்டாகப் பிளந்ததன் பின்பு ஒவ்வொன்றையும் சமாந்தரமான கல்லில் வைத்துத் தட்டுப் பொல்லினால் அடிக்க வேண்டும். ஒரு நிமிடத்திற்கு 20 அல்லது 30 தடவைகள் அடிக்கும் பொழுது அதில் உள்ள பசைத்தன்மை இல்லாமல் போவதுடன் குறுக்கு முகமாகவுள்ள மெல்லிய நுண்ணிய நார்களும் அகன்றுவிடும். இதனை இன்னொரு முறையிலும் இலகுவாக மேற்கொள்ளலாம், கங்கு மட்டையின் நடுப்பாகத்தில் குறுக்கு நெடுக்காக மேல் தோல் மட்டும் பிரிக்கக் கூடிய முறையில் மெதுவாகக் கூரிய கத்தியால் கீறி விட்டுத் தட்டுப் பொல்லினால் அடிக்கும் போது இலகுவில் பிரிந்து தும்பு வெளிப்படும். அவற்றினை இரும்பு ஆணியினால் ஆன சீப்பில் இட்டு வாருவதன் மூலம் சுத்தம் செய்ய முடியும்.

கழிவு தும்பையும் பிரயோசனப் படுத்த முடியும். தண்ணீரில் ஊறவைத்து மூங்கிலினால் அடித்துச் சுத்தம் செய்தால் கழிவு தும்பில் இருந்து கயிறு, மெத்தை, வாகனச் சாரதிகளின் இருக்கை போன்றவற்றைத் தயாரிக்கலாம்.

# பனம் தும்பிலிருந்து பெறக்கூடிய பொருட்களும் பயன்பாடுகளும்

| | |
|---|---|
| 1. துடைப்பங்கள் | 1. தெருக்களையும், வீடுகளையும் துப்பரவு செய்யப்பயன்படும். |
| 2. தூரிகைகள் (கறுப்பு / வெள்ளைத் தும்பிலிருந்து) | 2. மலசல கூடங்களையும், குளிக்கும் அறைகளையும் கழுவுவதற்குப் பயன்படும். |
| 3. தூரிகைகள் (மிருதுவான வெள்ளைத் தும்பிலிருந்து) | 3. இயந்திர உபகரணங்களைத் துடைத்துத் துப்புரவு செய்யவும், பொற்கொழிலாளர்களின் உபயோகத்திற்கும் பயன்படும். |

பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகளும், துடைப்பங்களும் 47 வகையான தொழில்களுக்கு அல்லது தேவைகளுக்குப் பயன்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

# பனம் தும்பின் உற்பத்தியும் அதன் எதிர்காலமும்

இலங்கையில் தூரிகைகளையும், துடைப்பங்களையும் உற்பத்தி செய்யும் தொழில் குடிசைக் கைத்தொழிலாக நடைபெற்று வருகிறது. அதனால் அவற்றின் தரம், அமைப்பு மற்றவர்களைக் கவரக் கூடியதாக இல்லை. இத்தொழிலை இயந்திர மயப் படுத்துவது தனிப்பட்டவர்களுக்குப் பொருளாதார ரீதியில் கஷ்டமான காரியமாகும். கூட்டுறவுச் சங்கங்கள் இத்தொழிலை இயந்திரமயமாக்கி ஈடுபடுவது அதிகளவு வருவாயைப் பெற வழிவகுக்கும்.

இலங்கையில் 70 இலட்சம் பனை மரங்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் பெரும் பகுதி வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலுமே உள்ளன. இப்பனை மரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு பயன் பெற்றால் பிரதேச வளர்ச்சிக்கும், பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கும் வழியமைக்கும். பனம் தும்பினாலான பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தியா வருடா வருடம் 5 லட்சம் ரூபாவிற்கும் மேலான அந்நியச் செலாவணியைப் பெறுகிறது.

33 நாடுகள் பனம் தும்பினை இந்தியாவிடம் இருந்து பெறுகின்றன. ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், போலந்து போன்ற நாடுகள் இதனுள் அடங்குகின்றன. இது பனம் தும்பிற்கான வெளி நாட்டுச் சந்தை வாய்ப்பைக் காட்டுகிறது. எமது பனம் தும்பு உற்பத்திப் பொருட்களை தரமும் கவர்ச்சியும் உடையதாக மாற்றி வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பு எம்மைத் தேடிவரச் செய்யலாம்.

தற்போது வடபகுதியில் தயாரிக்கப்படும் பனந்தும்பு கொழும்பு கற்பகத்தில் விற்பனையாகின்றது. இதனால் தென்னிலங்கையில் பல சிறு கைத்தொழிலாளர்கள் 'பிரஷ்' (தூரிகை) செய்வதன் மூலம் தாமும் வருமானத்தைப் பெற்று, பலருக்கும் வேலைவாய்ப்பினைக் கொடுக்கின்றனர். சிலர் ஏற்றுமதியும் செய்து வருமானம் பெறுகின்றனர். நாம் இலகுவாக இருவழிகளில் பணத்தினைச் சம்பாதிக்க இடமுண்டு.

1. தும்பை நாமே தயாரித்து விற்பது (அதனைப் பனை அபிவிருத்திச் சபை கொள்வனவு செய்யும்) அல்லது ஏற்றுமதி செய்வது.
2. தயாரித்த தும்புகளை வாங்கிப் பல்வேறு வகையான தூரிகைகளைச் செய்து விற்பனை செய்வது.

தூரிகை செய்வது தொடர்பான விபரங்களையும், தொழில் நுட்ப ஆலோசனைகளையும் நீங்கள் பனை அபிவிருத்திச் சபையிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய நூலகப் பிரி
மாநகர நூலக சே

அச்சகம்:
ஸ்வர்ணம் பப்ளிசிர்ஸ்
5, கலைப்புலவர் வீதி
(பெருமாள் கோவிலடி)
யாழ்ப்பாணம்.